**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT, UTHIRAMERUR.**

**OS.No. 16/2021**

| | |
|---|---|
| Name: பெருமாள் | Caste: |
| Father's Name: **சின்னபையன்**<br>Husband Name : | Calling: |
| Village:. | Religion: |
| Taluk: | Age: |
| The Oath was administered to the witness by Tmt.L.Meerabai, Gr.III, BC and was solemnly affirmed by the witness in accordance with the provisions of the Oaths Act of 1969 on 05.06.2026 | |

**05.06.2026**

**பி.வா.சா.1. – வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கின் வாதி என் உடன்பிறந்த சகோதரர் என்றால் சரிதான். என் அண்ணன் என் மீது எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் தெரியாது. வீட்டுமனையின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியும். சர்வே எண். 258/5 அதன் வீஸ்தீரணம் 21/2 செண்ட் ஆகும். அந்த சொத்தில் ஒருபுறம் குடிசை வீடு உள்ளது என்றால் சரியல்ல. அந்த சொத்தில் இரண்டு சர்வீஸ் உள்ளது என்றால் இல்லை ஒன்று தான் உள்ளது. அந்த சர்வீஸ் எண். 505/15 ஆகும். நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் ஒரு குடிசை வீடு மற்றும் ஒரு குரூப் அவுஸ் வீடு உள்ளது என்றால் சரியல்ல. குடிசை வீடு இல்லை. நான் இந்த வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு தண்ணீர் குழாய் இணைப்பு உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தில் இரண்டு மின் இணைப்புகள் உள்ளது என்றால் சரியல்ல.

எனது தந்தைக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் நானும், வாதியும் மற்றும் இரண்டு தங்கைகள் உள்ளனர். தாவா சொத்து பொறுத்து என் பெயரிலும் வாதியின் பெயரிலும் கூட்டுப்பட்டா உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து எனக்கும் வாதிக்கும் மட்டுமே உரிமை என்றால் சரியல்ல. எனது தங்கைகளுக்கும் உரிமை உண்டு. ஆனால் பட்டா எனது பெயரிலும்

வாதி பெயரிலும் தாக்கலாகி உள்ளது என்றால் சரிதான். எனது பிராமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

எனக்கு பூர்வீக சொத்து உள்ளதா என்றால் உள்ளது. அதன் சர்வே எண். 108/B ஆகும். அதன் விஸ்தீரணம் 38 செண்ட் ஆகும். அதன் பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் எனது பாட்டியின் பெயரில் உள்ளது. மேற்படி சொத்து எனது பாட்டியின் பெயரில் உள்ளது என்பதை காண்பிக்கும் வகையில் ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். இதை தவிர்த்து வேறு ஏதனும் பூர்விக சொத்து உள்ளது என்றால் உள்ளது. அது என்பாட்டி திரௌபதியம்மாள் சம்பாதித்த சொத்து ஆகும். மேற்படி பூர்வீக சொத்து குறித்து ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்தில் வாதிக்கு பங்கு உள்ளது என்றால் சரிதான். பூர்வீக சொத்தில் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். ஆனால் வழக்கு எண் எனக்கு தெரியாது. நான் சொல்வது போல் எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. தாவா சொத்து எனக்கும் வாதிக்கும் மட்டுமே பாத்தியப்பட்டு சொத்து என்றாலும் வேறு எவருக்கும் அதில் பங்கு இல்லை என்றாலும் சரியல்ல.

இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பாக வாதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினரா என்றால் அனுப்பினார். அதனை நான் பெற்றுக் கொண்டேன். அதற்கு பதில் அனுப்பவில்லை என்றால் சரியல்ல. நான் பதில் அனுப்பினேன். பதில் அறிவிப்பை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேன். நானும் வாதியும் ஒற்றுமையாக இருந்தபோது தான் குரூப்அவுஸ்காக மனு செய்து ஆணை பெற்றோம் என்றால் சரியல்ல.

மேற்படி குரூப் அவுஸ் வீட்டினை யார் கட்டியது என்றால் நான் தான் கட்டினேன். வாதிக்கு அந்த வீடு குறித்து எந்த விவரமும் தெரியாது. மேற்படி சொத்திற்கு வாதியும் வீடு வரி கட்டியுள்ளார் என்றால் சரியல்ல. நான் தான் கட்டி வருகிறேன். வாதி சென்னையில் வேலை செய்கிறார் என்றாலும் அவரது மனைவி மற்றும் பிள்ளைகள் தான் தாவா சொத்தில் வசித்து வருகிறார்கள் என்றாலும் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும், தாவா சொத்தில் வாதியின் மனைவி பிள்ளைகள் வசித்து வருகிறார்கள் என்றாலும் சரியல்ல.

(வழக்கறிஞரின் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)

**Sd/–R.கிருத்தியா,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,**
**உத்திரமேரூர்.**